[1996 ஜூலை 24

(இ) தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இன்னும் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

"தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். பிரிவு மாணவர்களுக்கு திடீரென்று கல்விக் கட்டணம் ரூபாய் 8 ஆயிரமாக இருந்தது 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டதால் படிப்பை மேற்கொண்டு தொடர முடியாமல் அவதியுறும் மாணவர்கள் நிலை குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்பு கொடுத்துள்ளார்.

அறிவிப்பிலுள்ள வாசகத்தை நானே படித்து விட்டேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்தவரையிலே அரசு கல்லூரிகளிலே தகுதி அடிப்படையில்தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆண்டுதோறும் 4 ஆயிரம் ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்களை நிரப்பும்போது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி மாணவர்களை அரசாங்கம் ஒதுக்கித் தருகிறது. 50 சதவீதம் கூடுதல் கட்டணம் இல்லாத இடங்கள் அதாவது Free Seats. 35 சதவீதம் Payment seats, அதாவது கட்டணம் செலுத்துகின்ற இடங்கள். இப்படி உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி இடங்களை ஒதுக்கித் தருகின்ற நேரத்தில் அவர்களிடம் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பதற்கும் உச்ச நீதிமன்றம்தான் உத்தரவிட்டிருக்கிறது. 1993-94-ஆம் ஆண்டில் கூடுதல் கட்டணம் இல்லாத இடங்களுக்கு. அதாவது Free Seats பொறுத்தவரை தனியார் கல்லூரிகளில் ஆண்டு ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாய் என்றும் Payment Seats பொறுத்தவரை, கட்டணம் செலுத்துகின்ற இடங்களுக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் என்றும் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. ஆனால் 1995 ஆகஸ்ட் 11-ஆம் தேதி அதே உச்ச நீதிமன்றம் இன்னொரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே ஆண்டு ஒன்றுக்கு கட்டணம் Free Seats ஆக இருந்தால் 20,000 ரூபாய் என்றும் கட்டணம் செலுத்தக் கூடிய இடங்களாக இருந்தால் ரூ. 75,000 என்றும் வசூலிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறது. உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையைத்தான் இந்த அரசாங்கம் அமல்படுத்துகிறதே தவிர அரசாங்கம் தனியாக

1996 ஜூலை 24]

எங்கேயும் கட்டணத்தை உயர்த்தவில்லை.

முற்பகல் 10-05

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையால் பாதிக்கப்படக் கூடியவர்கள், தகுதி வாய்ந்த மாணவர்கள். திடீரென ரூ.8,000-லிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படுகின்ற காரணத்தினால் அதைச் செலுத்த முடியாமல் பல மாணவர்கள் மருத்துவப் படிப்பைத் தொடர முடியுமா என்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. எனவே, பாதிக்கப்படக் கூடிய மாணவர்களை அரசுக் கல்லூரிகளுக்குள்ளேயே எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதா என்பதை அமைச்சரிடத்திலேயிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, இதிலே அரசாங்கம் தலையிட முடியாது. அது மட்டுமல்ல, கடந்த ஆண்டு 1993-94-இல் Payment Seats-க்கு ரூ.1,40,000 ஆக இருந்ததை ரூ. 75,000 ஆகக் குறைத்திருக்கிறார்கள். அதேநேரத்திலே Free Seats-க்கு ரூ. 8,000 என்பதை ரூ.20,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள்தான் உச்ச நீதிமன்றத்திடம் முறையிட்டு தங்களுக்கு நியாயம் கேட்க வேண்டுமே தவிர தமிழக அரசாங்கம் இதிலே ஒன்றும் செய்ய முடியாது.

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.